



கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற டிசம்பர் 19, 20ம் தேதிகளில் ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரவுள்ளார். சோலாரில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மேடையை மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி பார்வையிட்டு ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, காவல் கண்காணிப்பாளர் ஐவகர், மாநகராட்சி ஆணையாளர் மனிஷ், உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவழி என்ன?**


**ஆ. ராசா**



பள்ளிகளில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ஏற்ற முறையான கழிவறைகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் படிப்பை பாதியில் கைவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகமாவதை சுட்டிக்காட்டி பேசிய திமுக துணைப் பொதுச் செயலாளரும் நீலகிரி தொகுதி மக்களவை உறுப்பினருமான ஆ. ராசா அதற்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள், மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் பற்றிய வெளிப்படையான அறிக்கையை வெளியிடுமாறு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சரிடம் நாடாளுமன்றத்தில் கோரியுள்ளார்.

**2. அபாயகரமான கழிவுகளுக்கு ஒன்றிய அரசு அனுமதியா?**

**கே. ஈஸ்வரசாமி**



சில நிறுவனங்கள் நாட்டில் தடைசெய்யப்பட்ட அபாயகரமான கழிவுகளை சரியான அனுமதி இல்லாமல் சுதந்திரமாக இறக்குமதி செய்கின்றன எனும் செய்தி குறித்து ஒன்றிய அரசிடம் மக்களவையில் பொள்ளாச்சி எம்.பி. கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். அரசிடம் இரசாயனக் கழிவுகளை இறக்குமதி செய்வதற்காக பதிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் உள்ளதா என்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் விதியை மீறி இறக்குமதி செய்பவர்கள் மீது பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை மற்றும் அப்புகார்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களையும் வெளியிடுமாறு அவர் கோரியுள்ளார்.

**3. வாய்ப்புகளை வழங்கியதா வேலைவாய்ப்பு மையங்கள்?**

**சி.என்.அண்ணாதுரை**



நாட்டில் வேலை வாய்ப்பை அதிகரிக்க வேலை வாய்ப்பு மையங்கள் மூலம் திறன் மேம்பாடு திட்டங்களை ஒன்றிய அரசு வழங்குவது குறித்து திருவண்ணாமலை சி. என். அண்ணாதுரை இன்று மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இளைஞர்களுக்கு வழிகாட்டும் வகையில் வேலைவாய்ப்பு மையங்கள் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் நடத்தப்பட்ட தொழில் திறன் மேம்பாடு மற்றும் ஆலோசனைத் திட்டங்கள், வேலைவாய்ப்பு மையங்கள் மூலம் வழங்கப்பட்ட வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு மையங்களின் செயல்திறனை ஒப்பிடும் ஆய்வறிக்கை மற்றும் பெண்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட விளிம்புநிலை மக்கள் வேலைவாய்ப்பு மையங்கள் மூலம் முழுமையாக பயனடைவதை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்றவைகளின் விவரங்களை அரசு வெளியிட வேண்டும் என அவர் தனது அறிக்கையில் கேட்டுள்ளார்.

**4. கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?**

**தரணிவேந்தன்**

நடப்பு நிதியாண்டில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியின் சதவிகிதம் எத்தனை என கேட்டு ஆரணி தொகுதி தரணிவேந்தன் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். பயிற்சி மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட முதன்மை, இடைநிலை, உயர்கல்வி, தொழிற்கல்வி போன்றவற்றிற்கு பிரிவுவாரியாக ஒதுக்கப்பட்ட நிதி, தமிழ்நாட்டில் எல்லோரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை வழங்குவதற்காக ஒன்றிய அரசின் எந்தெந்த திட்டங்களுக்கு இந்நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது மற்றும் மொத்த ஜிடிபியில் கல்விக்கான ஆறு சதவீதத்தை எட்டுவதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன போன்ற விவரங்களையும் கேட்டுள்ளார்.



**5. கீழடி அறிக்கைகள் - தாமதம் ஏன்?**

**டாக்டர். ராணி ஸ்ரீகுமார்**

கடந்த 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட கீழடி முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்ட அகழ்வாராய்ச்சி அறிக்கைகள் அச்சிடப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்படுவதில் இன்னும் தாமதம் ஏன் என்று ஒன்றிய அரசிடம் தென்காசி மக்களவைத் தொகுதி திமுக உறுப்பினர் டாக்டர். ராணி ஸ்ரீகுமார் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டில் நடைப்பெற்ற தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளின் பட்டியல் அவற்றின் அறிக்கைகள் வெளியிடப்பட்ட தேதியுடன் வெளியிட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.



## அ.ஸ்ரீதர் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மு.ராசா எம்.சி - கே.கண்ணன் எம்.சி. முன்னிலை!

# கலைஞர்நகர் வடக்கில் துணை முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச. 17

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர்நகர் வடக்குப் பகுதி, மாவட்டப் பிரதிநிதி அ.ஸ்ரீதர் தலைமையில் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் (18.12.2024 புதன்கிழமை) மாலை 5 மணிக்கு, சாலிகிராமம், தசராதபுரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதிக் கழகச் செயலாளர்கள் மு. ராசா எம்.சி, கே.கண்ணன் எம்.சி, வட்டக் கழகச் செயலாளர் எஸ்.பாஸ்கரன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் சுப.முத்துவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைக் கழகப் பேச்சாளர் தஞ்சை காமராஜ், இளம் பேச்சாளர் தி.பிரபு,

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ. எம். வி. பிரபாகரராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி. சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்வில்

மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், தொகுதி பார்வையாளர் வே.உமாகாந்த், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ். டி.தங்கராஜ், உ.துரைராஜ், பி. எஸ். முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், வட்டக் கழகச் செயலாளர்கள் பொன்.வர.லோகு எம். சி., மு.கோவிந்தராஜன், எஸ்.மைக்கேல், வழக்கறிஞர் ராஜா, தஞ்சை பாபு, மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன், நிளவரசி துரைராஜ், மாவட்ட அமைப்பாளர்கள் ஆர்.சசி குமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், தலைமை கழகப் பேச்சாளர் ஆலந்தூர் மலர்வண்ணன், சென்னை அரங்கநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

# பல்லாவரம் தொகுதியில் பாதாள சாக்கடைகள் சீரமைப்பு - புதிய உந்து நிலைய கிணறுகள்!

## அமைப்பற்கு பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில் ஆலோசனை!

பல்லாவரம் டிச 17

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி, தாம்பரம் மாநகராட்சி 2 மற்றும் 3 வது மண்டலங்களில் பாதாள சாக்கடைகளில் ஆங்காங்கே ஏற்பட்டுள்ள பழுதுகளால் கழிவு நீர் வெளியேறி பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்த பழுதுகளை சரி செய்து வரும் காலங்களில் பொதுமக்கள் பாதாள சாக்கடையில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் அவதிக்குள்ளாவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் விதமாக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் சம்பந்தப்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுகளுக்கு பின்னர் குரோம்பேட்டையில் உள்ள 2 வது மண்டல அலுவலகத்தில் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடன் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பாதாள சாக்கடையில் இருந்து கழிவு நீர் வெளியேறும் பகுதிகள், பல ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட பாதாள சாக்கடை குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டுள்ள பகுதிகள், சேதமடைந்த குழாய்களை மாற்றுவது, புதிய ஊந்து நிலைய கிணறுகள் அமைப்பது போன்ற பல்வேறு ஆலோசனைகள் மற்றும் கருத்துகள் சம்பந்தப்பட்ட மண்டலங்களை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளிடம் கேட்கப்பட்டு 2வது மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 9 இடங்களில் புதிய ஊந்து நிலைய கிணறுகள், 3வது மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 8 இடங்களில் புதிய ஊந்து நிலைய கிணறுகள் என மொத்தம் 17 இடங்களில் புதிய ஊந்து நிலைய கிணறுகள் அமைக்க திட்டமிடப்பட்டு அதற்கான மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பி நிதி பெற்று பணிகள் நடைபெற்று முடிந்த பின்னர் வரும் காலங்களில் பாதாள சாக்கடையினால் பொது மக்களுக்கு எந்த பாதிப்புகளும் ஏற்படாமல் இருக்கும் வகையில் பணிகளை நடைபெற வழிவகை செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வு மற்றும் ஆலோசனைக் கூட்டங்களில் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, உதவி ஆணையர்கள் சுவர்ணலதா ராஜேஸ்வரி மாநகராட்சி பொறியாளர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர்கள் உதவி பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தந்தை பெரியார் குடும்பத்தின் சார்பில் முதல்வருக்கு உருக்கமான நன்றி! நன்றி!!

## மறைந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் புதல்வர் இ.சஞ்சய் சம்பத் நெகிழ்ச்சி!

சென்னை, டிச. 17-

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மறைந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் புதல்வர் இ.சஞ்சய் சம்பத் விடுத்துள்ள உருக்கமிகு அறிக்கை வருமாறு:

தந்தை பெரியார் பேரன், சொல்லின் செல்வர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களின் தலைமகன், தமிழக காங்கிரஸ் தொண்டர்களால் தன்மானத் தலைவர் என்று அன்போடு அழைக்கப்பட்ட எனது தந்தை ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உடல் நலம் குன்றி மருத்துவனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி கடந்த 14-12-2024 சனிக்கிழமை காலை நம்மை விட்டு பிரிந்தார்.

மத்திய அமைச்சர், மூன்று முறை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் என்று பல்வேறு பொறுப்புகளில் தனித்துவத்தோடு செயல்பட்டு, மக்களின் பிரச்சினைகளை தனக்கே உரிய பாணியில் பளிச்சென எடுத்துரைத்த அவரது அரசியல் பயணத்தை தமிழகம் நன்கு அறியும்.

எனது தந்தையார் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட செய்தி அறிந்தவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவமனைக்கே அமைச்சர் பெருமக்களுடன் நேரில் வந்து அவரது உடல்நிலையை அக்கறையுடன் கேட்டறிந்து, மருத்துவர்களிடமும் ஆலோசனை செய்துவிட்டுச் சென்றார்.

அவர் இயற்கை எய்திய சில மணி நேரத்திலேயே எங்கள் இல்லத்திற்கு வருகை தந்து எங்களுக்கு ஆறுதல் வழங்கினார். இறுதிச்சடங்கு நடைபெற்ற மறுநாளும் எங்கள் இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறியதோடு இறுதிச் சடங்கு ஏற்பாடுகளை எங்கள் குடும்பத்தின் மூத்த அண்ணனாய் கேட்டறிந்து, எனது தந்தையின் உடல் முழு அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படும் என்ற அரசு உத்தரவையும் பிறப்பித்து எனது தந்தைக்குப் பெருமை சேர்த்தார்.



திராவிட பாரம்பரியமும், தேசிய சிந்தனையும் கொண்ட எங்கள் குடும்பம் அதே வழியில் என்றும் பயணிக்கும்.

துயரமான இந்த வேளையில் எங்களுக்கு துணை நின்ற முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், எங்களுக்கு நேரிலும், அலைபேசி வாயிலாகவும் ஆறுதல் வழங்கி, இறுதி அஞ்சலி நிகழ்வில் எங்களோடு தோள் நின்ற அனைவருக்கும் எனது தாயார் சார்பாகவும், தந்தை பெரியார் குடும்பம் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இ.சஞ்சய்சம்பத் தெரிவித்துள்ளார்.

## துரை கபிலன் - விசாலாட்சி கபிலன் எம்.சி. - வி.எம்.டி.ராஜாரமணன் முன்னிலை!

# வேளச்சேரி கிழக்கு 180 (அ) வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாள், பொதுக்கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஆவடி கா.மு.ஜான், ஏ.ஆட்லின் சிறப்புரை! இரா.நடராஜ் தலைமை!

சென்னை, டிச.17

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்குப் பகுதி 180 (அ) வட்டத்தில் வேளச்சேரி கிழக்குப்பகுதி தொண்டரணி துணை அமைப்பாளர் இரா. நடராஜ் தலைமையில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவான்மியூர் தெற்கு மாட வீதியில் இன்று (17.12.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணி அளவில் மாபெரும் தெருமுனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் வேளச்சேரி கிழக்கு பகுதி செயலாளர் துரை கபிலன், மாமன்ற உறுப்பினர் விசாலாட்சி கபிலன், வட்ட கழக செயலாளர் வி.எம்.டி. ராஜாரமணன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பாலசுந்தரம், அடையார் பி.ஜே.பாஸ்கர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம். விநாயகமூர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் அடையார் சி.சுரேஷ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் சி. பரிமேலழகன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சசிகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தொண்டரணி பகுதி அமைப்பாளர் ஜே. சதீஷ்குமார், வட்டக் கழக நிர்வாகிகள் சி.ஜே. ஜெகதீஷ், தா.சரவணன், எம்.எ.ஜானி, துரை தமிழரசு, மா.தங்கம், தேவி, கந்தன், எம்.டி.அன்பு, எஸ். பத்மநாபன், டி.சந்தான கிருஷ்ணன் ஆகியோர் வரவேற்புரை ஆற்ற உள்ளனர்.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமை கழக பேச்சாளர்கள் ஆவடி கா.மு.ஜான், ஏ.ஆட்லின், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எம்.எச் அஸன் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ். குணசேகரன், பாலவாக்கம் தா. விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இறுதியாக ஆர்.குப்பன், பி.எம்.கிருஷ்ணா, டி. பிரகாஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி தலைமையில் தியாகராயர்நகரில்

# சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் 1500 நபர்களுக்கு நலஉதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை! மயிலை.த.வேலு எஸ்.ஜோயல் ஜெ.கருணாநிதி கே.ஏழுமலை பங்கேற்பு!

சென்னை, டிச. 17

சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (17.12.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு, அசோக் நகர், 3 வது அவென்யூவில் நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

135 வது வட்டக் கழகச் செயலாளர் எம்.எஸ்.பழனி வரவேற்புரை ஆற்றுகிறார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.உமாசங்கர், எ.அஸ்வின்குமார், டேன்டி. பிரகாஷ், தினேஷ் மாணிக்கம், தா.விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல், பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி, நந்தனம் மதி, எஸ்.முரளி, கழக மாணவர் அணி துணைச் செயலாளர் எஸ்.மோகன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மாம்பலம் அ.சந்திரசேகர், கோடம்பாக்கம் மு.சத்தியா, கோ.சு.மணி, ஜி.டி.அம்பேத்கர், ஜெ.ஜானகிராமன், அ. வாசுதேவன், எம்.ஆறுமுகம், வழக்கறிஞர் எம்.ராஜதுரை, மாமன்ற உறுப்பினர்கள் எஸ். பாஸ்கர், கோமதி மணிவண்ணன், கார்த்திகா பாஸ்கர், வட்டச் செயலாளர்கள் மு. செல்வகுமார், எம். கிருஷ்ணமூர்த்தி, மு.ம.செந்தில்குமார், ஜி.பி. செந்தில்குமார், ஆர்.சக்திவேல், என்.துரை, எஸ்.லஷ்மிகாந்தன், ந.மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங்ராஜா, டி. கமல், தட்சன் ஹரிகரன், பி. ஜெயக்குமார், பி.மாரி, மாவட்டப் பிரதிநிதிகள் ஜெ. சீனிவாசன், ரா.செந்தில்குமார், எம். பி.மாறன், ஆர்.லோகு, அ.பக்ருதீன், சி.மாரி, அ.ஆனந்தன், ம.அ.நூர்அகமது, ம.கி. தோழப்பன், எல்.வீரப்பன், எஸ்.மோகன்ராஜ், எஸ்.ராமலிங்கம், பி.சரவணன், ஆர். கே.முருகேஷ், சி.சங்கர், என். டி.ஆர்.டி.வேலு, த.ராஜசேகரன், கே.கே.செந்தில், எச்.பலராமன், சாலி.கே.மோகன், எஸ்.கண்ணதாசன், இரா. மூர்த்தி மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி முடிவில் ஜி. அருண்குமார், சி.பிரசன்னா, எஸ்.தினேஷ்குமார், எஸ். அஜித்கண்ணன், என்.புவியரசு, எஸ்.பாலுசெல்வம், எஸ். அசோக்குமார், கே.சபிநேசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி பள்ளிக்கரணை 189 வது வட்டத்தின் சார்பாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு உதயநிதி உதய நாள் மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான மா.சுப்பிரமணியன் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். வட்ட செயலாளர் வ.பாபு எம்.சி. தலைமை தாங்கிட, ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்துப் பேசினார். கழக பேச்சாளர் தமிழ் சாதிக், இளம் பேச்சாளர் சந்தோஷ் ஜெய் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட துணை செயலாளர் மு.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஜி.வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.பஷீர், எம்.கே.ஏழுமலை, அ.ஹரிகிருஷ்ணன் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பா.அருண்குமார், எம.பார்த்திபன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.இ.பாண்டியன், மாமன்ற உறுப்பினர்கள் ஜி.சங்கர், அ. முருகேசன், பகுதி கழக நிர்வாகிகள் கே.டி.ரவி வட்டக் கழக செயலாளர் ஆர்.நாகராஜ், தா.ராஜேந்திரன், இ.ஆரோன், ஜி.ரவி, பா.தேவகுமார், மாவட்ட பிரதிநிதிகள் கே.தேவேந்திரன், பி.கே தங்கம் , கோ.முருகவேல் பகுதி கழக, வட்டக் கழக, மாவட்ட ,பகுதி, வட்ட, அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.